CNR NO: TNTH13-008371-2022

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.**
**முன்னிலை – திருமதி.G.K.வேலுமயில், M.L.,MBA.,**
**நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.**
**2023–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02–ஆம் நாள் திங்கட்கிழமை**
**STC No: 1279/2022**

| | | | |
|---|---|---|---|
| 1 | குற்றம் முறையிடுபவர் | : | அரசு சார்பாக – சார்பு ஆய்வாளர்,<br>போடி நகர் காவல்நிலையம்,<br>குற்ற எண். 2614/2020. |
| 2. | குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | 1). சக்திவேல் (25/2023),<br>த/பெ. கருப்பையா.<br>2). ஈஸ்வரன் (32/2023),<br>த/பெ. மொக்கைராஜ்.<br>**(மேற்படி 1, 2 எதிரிகள் A பார்ட்டியினர்)**<br>3). மாரிமுத்து (37/2023),<br>த/பெ. குமார்.<br>4). திருப்பதி (25/2023),<br>த/பெ. குமார்.<br>5). நாகராஜ் (28/2023),<br>த/பெ. குமார்.<br>**(மேற்படி 3 முதல் 5 எதிரிகள் B பார்ட்டியினர்)** |
| 3. | சம்பவ நாள் | : | 18.08.2020. |
| 4. | புகார் நாள் (குற்ற அறிக்கை தாக்கலான நாள்) | : | 18.08.2020. |
| 5. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | A1:– 18.08.2020.<br>A2:– 18.08.2020.<br>A3:– 18.08.2020.<br>A4:– 18.08.2020.<br>A5:– 18.08.2020. |
| 6. | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | : | A1:– 18.08.2020 (Station Bail).<br>A2:– 18.08.2020 (Station Bail).<br>A3:– 18.08.2020 (Station Bail).<br>A4:– 18.08.2020 (Station Bail).<br>A5:– 18.08.2020 (Station Bail). |
| 7. | குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டு | : | எதிரிகளின் மீது இ.த.ச பிரிவு 160–ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |

CNR NO: TNTH13-008371-2022

| | | | |
|---|---|---|---|
| 8 | எதிரிகளின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரிகளின் மீது இ .த.ச பிரிவு 160—ன் கீழ் குற்றசாட்டு வனையபட்டுள்ளது. |
| 9. | எதிரிகளின் பதில் | : | குற்றவாளி என ஒப்புக்கொண்டுள்ளார்கள். |
| 10. | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 02.01.2023. |
| 11. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 02.01.2023. |
| 12 | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 02.01.2023. |
| 13 | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | எதிரிகளின் மீது இ .த.ச பிரிவு 160—ன் கீழ் குற்றவாளிகள் என முடிவு செய்யப்பட்டுள்ளது. |
| 14 | தீர்ப்பு | : | எதிரிகள் ஆஜர் . முடிவாக 1, 2 எதிரிகளான A பார்ட்டியினரும், 3 முதல் 5 எதிரிகளான B பார்ட்டியினரும் இ .த.ச பிரிவு 160—ன் கீழான குற்றத்தினை பொறுத்து குற்றவாளிகள் என முடிவு செய்து, மேற்படி குற்றத்தை பொறுத்து , மேற்படி எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 255(2)—ன் கீழ் குற்றவாளிகள் என்று முடிவு செய்தும் , மேற்படி இ.த.ச பிரிவு 160—ன் கீழான குற்றத்திற்கு எதிரிகளுக்கு தலா ரூ. 100/— அபராதம் விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் ஒரு வாரம் மெய்க்காவல் சிறைத் தண்டனை விதித்தும் , மேற்படி மொத்த அபராதத்தொகை ரூ .500/— அபராதம் விதித்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது . இவ்வழக்கில் தடயம் எதுவும் தாக்கல் இல்லை. |
| 15 | தீர்ப்பின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நாள் | : | 02.01.2023. |
| 16 | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை. |

******

CNR NO: TNTH13-008371-2022

இந்த வழக்கானது 15.07.2022–ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் திருமதி. M. தவமணிசெல்வி M.A., L.L.M, அரசு உதவி வழக்கறிஞர் நிலை –1 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் எதிரிகளே முன்னிலையாகியும், 02.01.2023–ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்.................

**தீர்ப்புரை**

1). 18.08.202–ஆம் தேதி 16.30 மணிக்கு போடி, புதூர், மினி தேவர் சிலை அருகில் இவ்வழக்கின் எதிரிகளான போடி, புதூர், வலசைதுறை ரோடு, மினி சிலை அருகில் குடியிருக்கும் 1–வது எதிரி சக்திவேல் மற்றும் கூடலூர் மூனுசாமி கோவில் தெருவைச் சேர்ந்த 2–வது எதிரி ஈஸ்வரன் ஆகிய இருவரும் ஒரு பிரிவாகவும் (A Party) போடி, புதூர் வலசைதுறை ரோடு, மினி தேவர் சிறை அருகில் குடியிருக்கும் 3–வது எதிரி மாரிமுத்து, 4–வது எதிரி திருப்பதி, 5–வது எதிரி நாகராஜ் ஆகிய மூவரும் மற்றொரு பிரிவாகவும் (B Party) பிரிந்து பொது இடத்தில் நின்று கொண்டு குடும்ப பிரச்சினை காரணமாக ஒருவரையொருவர் மாறி மாறி வசைபாடி சச்சரவுகள் செய்து பொதுஜன அமைதிக்கு இடையூறு செய்த குற்றத்திற்காக, போடி நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளரால், எதிரிகளின் மீது இ.த.ச பிரிவு 160–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2). வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிகளுக்கு கு.வி.மு.ச 207–வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

3). வழக்கு ஆவணங்களின் நகல்களை எதிரிக்கு படித்துப் பார்க்கப் போதுமான அவகாசம் வழங்கப்பட்டும், கு.வி.மு.ச 173–ன் கீழ் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலித்து எதிரிகளை விசாரித்து, எதிரிகளின் மீது இ.த.ச பிரிவு 160–ன் படி குற்றச்சாட்டை வனைந்து விளக்கிக் கூறி எடுத்துரைக்க, எதிரிகள் இவ்வழக்கு

குற்றத்தை தன்னிச்சையாக ஒப்புக் கொள்வதாக கூறி குற்ற ஒப்புதல் மனு ஒன்றும் தாக்கல் செய்துள்ளார்கள்.

4). எதிரிகளின் தன்னிச்சையான ஒப்புதல், எதிரிகளின் குற்ற ஒப்புதல் மனு மற்றும் ஆவணங்களை பரிசீலித்து, இந்நீதிமன்றம் எதிரிகளின் மீது இ.த.ச பிரிவு 160–ன் கீழ் குற்றவாளிகள் என்று முடிவு செய்கிறது.

5). எதிரிகள் ஆஜர். முடிவாக 1, 2 எதிரிகளான A பார்ட்டியினரும், 3 முதல் 5 எதிரிகளான B பார்ட்டியினரும் இ.த.ச பிரிவு 160–ன் கீழான குற்றத்தினை பொறுத்து குற்றவாளிகள் என முடிவு செய்து, மேற்படி குற்றத்தை பொறுத்து, மேற்படி எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 255(2)–ன் கீழ் குற்றவாளிகள் என்று முடிவு செய்தும் , மேற்படி இ.த.ச பிரிவு 160–ன் கீழான குற்றத்திற்கு எதிரிகளுக்கு தலா ரூ. 100/– அபராதம் விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் ஒரு வாரம் மெய்க்காவல் சிறைத் தண்டனை விதித்தும், மேற்படி மொத்த அபராதத்தொகை ரூ.500/– அபராதம் விதித்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது . இவ்வழக்கில் தடயம் எதுவும் தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு , என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02–ஆம் நாள் திங்கட்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

G K VELUMAYIL
Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.01.02 16:47:59 +0530

நீதித்துறை நடுவர்,
போடிநாயக்கனூர்.

பின் இணைப்பு இல்லை.